14th March 1966]

*273 கேள்வி—திரு. கோ. சி. மணி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-65, 1965-66-ம் வருடங்களில் தஞ்சை மாவட்டத்தில் ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் வழங்குதல், மற்றும் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல் முதலிய வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அவற்றுள், இதுவரை செலவழிக்கப்பட்டுள்ள தொகை முறையே எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஹரிஜனங்களுக்கு விட்டு மனைகள் வழங்கவும், சாலைகள் அமைக்கவும் 1964-65-ம் ஆண்டிற்கு 2,52,600 ரூபாயும், 1965-66-ம் ஆண்டிற்கு 2,22,600 ரூபாயும் ஒதுக்கப்பட்டது.

(இ) 1964-65-ல் ஆன செலவு—

விட்டு மனைகளுக்காக ரூ. 1,34,007.67.

சாலைகளுக்காக ரூ. 1,18,592.33.

1965-66-க்கான செலவு (31—12—1965 வரை ஆன செலவு)—

விட்டு மனைகளுக்காக ரூ. 2,06,819.94.

சாலைகளுக்காக ரூ. 15,970.65.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1964, 1965, 1966 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள், இணைப்புச் சாலைகள் ஏற்படுத்த செலவான தொகையைக் குறிப்பிட்டார்கள். அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் எவ்வளவு தொகை இருந்தால் அந்த பிரச்னையை பூராவாக நிவர்த்தி செய்ய முடியும், அந்த லட்சியம் எத்தனை ஆண்டுகளுக்குள் நிறைவேறும் என்கிற விவரம் தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

அரசாங்க நந்தனர் உயர்நிலைப் பள்ளிகள்

*274 கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசாங்க நந்தனர் உயர்தர ஆண், பெண் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள், ஆசிரியைகள் பற்றுக்குறை இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதுபற்றி எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[14th March 1966

திரு. சி. சிவசுப்பிரமணியன் : இப்போது, பள்ளி ஆரம்ப காலத்தில் ஆசிரியர்கள் கிடைக்காத காரணத்தினால் மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இனிமேலாவது அதைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கலெக்டர் கொடுத்திருக்கும் தகவலில் இருந்து ஆசிரியர்கள் எண்ணிக்கையில் குறைவு கிடையாது. பயிற்சி பெறாத ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பயிற்சி பெற்றவர்கள் கிடைத்தவுடன் இவர்களை நீக்கிவிடுகிறார்கள்.

Model Ration shop

* 275 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government have any proposal to run a model Ration Shop in Madras City, and

(*b*) if, so, the objects and the details thereof ?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The object of the scheme is to find out the problems involved in running a ration shop.

திரு. வை. சங்கரன் : ஒவ்வொரு ரேஷன் ஷாப்பைப் பொறுத்த வரையிலும் ஒரு நாணயமான, தைரியமான கன்ஸ்யூமரை தேர்ந்தெடுத்து ரகசியமாக அங்கு சப்ளை செய்யப்படும் தானியங்களின் நிலையைப் பற்றித் தெரிந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ? இப்படிச் செய்வதனால் அரிசியில் செய்யப்படும் ஒழுங்கீனத்தை தவிர்க்க இடமேற்படாதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கன்ஸ்யூமர் சொசைட்டிகள் என்றே ஏற்படுத்தும் விஷயமாக அரசாங்கம் பரிசீலித்து உதவி செய்து வருகிறது.

திரு. வை. சங்கரன் : நான் சொன்னதை சரியாக விளக்கவில்லை என்று நினைக்கிறேன். இப்பொழுது இருக்கக்கூடிய பிராப்ளம் ரேஷன் ஷாப் பற்றியது அல்ல. கன்ஸ்யூமர்களுக்கு அரிசி சப்ளை செய்வதில், பிராப்ளம் அல்லது கஷ்டங்கள் இருக்கின்றன, அதைத் தெரிந்துகொள்ளக்கூடிய முறையிலேதான் கவனிக்கவேண்டியிருக்கிறது. அரசாங்கம் ரேஷன் ஷாப்பை வைத்துவிட்டால் அந்தக் கடையிலே நல்லதாக அரிசி இருந்து வரலாம். ஆனால் கன்ஸ்யூமர்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களைத் தெரிந்து கொள்வதற்கு ரகசியமாக மாதிரி கன்ஸ்யூமர்களை தேர்ந்தெடுத்து ஏற்பாடு செய்து அந்த கன்ஸ்யூமர்களிடமிருந்து பிரச்னைகளை தெரிந்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : ஒற்றர்கள் மாதிரி வைத்து கன்ஸ்யூமர்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்கள்.